Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 289

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆவணி 15 ஆம் நாள் | ரவி அவ்வல் 19 | (31-8-61) | வியாழக்கிழமை | இதழ் 170

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

# ‘இந்தியா - இலங்கை நட்புறவு பலப்பட வேண்டும்’

## இந்திய ஹைகமிஷனருக்கு யாழ்ப்பாண மேயர் உபசாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாணத் தமிழர்கள் தென்னிந்திய சகோதரர்களுடன் சேர்ந்து கலாச்சார சமய உறவுகளை நினைவுக்கு எட்டாத காலந்தொடக்கம் பாதுகாத்து வந்திருக்கின்றனர். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவுக்கும் பாரதப் பிரதமர் நேருவுக்கும் நல்ல நட்புறவும் அதனால் இருநாட்டிற்கிடையிலும் நல்லெண்ணமும் ஏற்பட்டுள்ளது. அந்த நல்லுறவு மேலும் நீடித்துப் பலப்பட வேண்டுமென விழைகின்றோம். இன்று எமக்கிடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அசைக்கமுடியாத அன்பானது எங்கள் நகருக்கு பரஸ்பர நன்மையை அளிக்குமென்றும் தங்கள்மூலம் தாய்நாடான இந்தியாவிற்கிடையிலும் அது நீண்டகாலம் நிலைத்து நிற்குமென்பதும் எனது நம்பிக்கையாகும். இப்பொழுது இருக்கும் பிணைப்பானது எங்கள் தொடர்பினால் மேலும் மேலும் பலம் வாய்ந்ததாக அமையுமென நம்புகிறோம்."

மேற்கண்டவாறு நேற்று மாலை யாழ்ப்பாணம் மாநகர சபையினால் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூருக்கு மாநகரசபையில் அளிக்கப்பட்ட வரவேற்பு தேநீர் விருந்துபசாரத்தின் போது தலைமை வகித்துப் பேசிய மேயர் திரு டி. எஸ். துரைராசா கூறினார். இந்த தேநீர் விருந்துபசாரத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. டி. துரையப்பா, கர்னல். உடுகமை, மாநகரசபை அங்கத்தவர்கள், கல்லூரி அதிபர்கள், முன்னாள் மேயர்கள், நகரின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திரு. துரைராசா தொடர்ந்து பேசியதாவது:-

இலங்கையில் தமிழ்ப்பாஷை, கலாச்சாரம் ஆகியவற்றின் தலைநகரான சரித்திரப்பிரசித்தி வாய்ந்த யாழ்ப்பாண நகருக்கு விஜயம்செய்திருக்கும் தங்களை மகிழ்ச்சியுடன் மாநகரசபை அங்கத்தவர்களின் சார்பில் வரவேற்கிறேன். சமயம், நாடகம், கவிதை போன்ற பல துறைகளிலும் சிறப்புற நல்ல படைப்புகளைத் தந்த சமயவிற்பன்னர்களையும், கவிஞர்களையும், அறிஞர்களையும் யாழ்ப்பாணம் அளித்திருக்கிறது- சுவாமி விவேகானந்தர், மகாத்மாகாந்தி, ஜவஹர்லால்நேரு, ராஜாஜி, கவிக்குயில்சரோஜினி நாயுடு, கவிஞர் தாகூர், டாக்டர் இராதாகிருஷ்ணன், ஜனாதிபதி இராஜேந்திரபிரசாத் ஆகியோரையும் வரவேற்கும் பாக்கியம் கடந்தகாலத்தில் எமக்குக் கிடைத்திருக்கிறது.

தென் கிழக்காசியாவிலேயே மிகச் சிறந்ததான ஒரு பொதுசன நூல்நிலையத்தை நாங்கள்

(8ம் பக்கம்பார்க்க)

## 5 டாக்டர்கள் ராஜினமா

### சிங்கள மொழி நிபந்தனை காரணம்

கொழும்பு, புதன்

சிங்களத் தகுதிப் பரீட்சையில் சித்திபெறவில்லை என்ற காரணத்தினால் சுமார் 20 டாக்டர்கள் வெளிநாடு சென்று உயர்தர வைத்தியப் பரீட்சை (எப். ஆர். ஸி. எஸ்.) யில் கலந்து கொள்ள முடியாத நிலையிலிருக்கிறார்கள். வெளி நாடு சென்று பரீட்சைகளில் கலந்து கொள்ள விரும்பும் டாக்டர்கள், அவர்களுக்காக நடத்தப்படும் விசேஷசிங்கள வகுப்புக்களில் தகுதி பெற வேண்டும் என சுகாதார இலாகா வற்புறுத்துவதே இதற்குக் காரணம். வெளி நாடு செல்ல தாங்கள் அனுமதிக்கப்படாவிட்டால் அரசாங்க சேவையிலிருந்து ராஜினமாச் செய்து விடப்போவதாய் இந்த டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களில் 5 பேர் ஏற்கெனவே தங்கள் ராஜினமாவைச் சமர்ப்பித்து விட்டதாய் சுகாதார அதிகாரி ஒருவர் கூறினார்.

## விடுதலை அடைந்த கைதிகளுக்கு வேலை வழங்கவும்

### சங்கம் கோரிக்கை

கொழும்பு, புதன்

கைதிகள் விடுதலை அடைந்து வெளிவந்ததும் அவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதில் அரசாங்கம் கைகொடுத்து உதவ முன்வரவேண்டும் என விடுதலைசெய்யப்பட்ட சிறைக் கைதிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்கவிருக்கிறது. உள்நாட்டு மந்திரியைச் சந்திக்கவிருக்கும் கோஷ்டி, கைதிகளுக்கு புனருத்தாரணம் வழங்கக்கூடிய ஆலோசனை சிலவற்றை மந்திரியிடம் சமர்ப்பிக்கும். குற்றஞ்சாட்டப்பட்ட காலத்தில் 1-ம் பிரிவு ஜெனரல் கிளரிக்கல் சேவையில் இருந்த மாஜிக் கைதிகள் இத்தூதுகோஷ்டியில் அங்கம் வகிப்பார்கள்.

## ஜெர்மனியர் சுட்டுக் கொலை

கிழக்கு பெர்லினிலிருந்து மேற்கு பெர்லினுக்கு தப்பிச் சென்ற இருவரை கிழக்கு ஜெர்மன் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.



இந்திய ஹைகமிஷனர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது பலாலி விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

## சுவாமி ராமேஸ்வரானந்த் உண்ணுவிரதத்தை கைவிடுவார்

### நேருவின் வேண்டுகோளுக்கு இணக்கம்

புதுடில்லி, ஆக. 30

பிரதம மந்திரி நேருவின் வேண்டுகோளை ஏற்று டில்லியில் உண்ணுவிரதமிருந்து வரும் பஞ்சாப் ஹிந்து தலைவரான சுவாமி ராமேஸ்வரானந்த் நாளைக் காலை 8 மணிக்குத் தன் உண்ணுவிரதத்தை முடித்துக் கொள்வாரென அறிவிக்கப்பட்டது.

இன்று லோகசபையில் உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி பேசுகையில், நாட்டிலுள்ள புனித இடங்கள், அரசியல் காரணங்களுக்கு உபயோகிக்கப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை என்றும், இந்த இடங்களின் புனிதத் தன்மை காப்பாற்றப்பட வேண்டும் என்றும் கூறினார்.

"பஞ்சாப் நிலையை உசிதம் போல் கவனிப்பது அந்த ராஜ்ய அரசாங்கத்தின் பொறுப்பாகும். பஞ்சாப்பில் குருத்துவாரம் போன்ற இடங்களில் உட் புகுந்த ஒருவர் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டால் உள்ளே சென்று அவரைக் கைது செய்ய முடியாது. இந்த இடங்களின் நிர்வாக அதிகாரிகள்தான் அவர்களை ஒப்படைக்க வேண்டும். இந்த விஷயத்தில் அவர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்.

பஞ்சாபி சுபா கோரிக்கை பற்றி பிரசுரம் வெளியிடுதல், பிரசாரம் செய்தல், இதர வகை விளம்பரங்கள் ஆகியன 144வது செக்ஷன் படி தடை விதிக்கப்பட்டன. ஆனால் இத் தடையை மாஸ்டர் தாராசிங்கும், சந்த் பட்டேசிங்கும் மீறி பொது மக்கள் முன் பிரசாரம் செய்ததால் அவர்கள் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது" என்றும் உள்நாட்டு மந்திரி கூறினார்.

## திரு. ஸி. பி. டி' சில்வா

கொழும்பு, புதன்

பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக காணி அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா விஸ்வாசப் பிரமாணம் செய்து கொண்டார். நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் இலங்கை திரும்பும் வரை அவர் தற்காலிகமாக இப்பதவியை வகிப்பார்.

## ரஷ்ய ராணுவச் செலவு அதிகரிப்பு

மாஸ்கோ, ஆக. 30

பெர்லின் நிலை காரணமாக ரஷ்யா தன் ராணுவச் செலவை மூன்றில் ஒரு மடங்காக அதிகரித்திருக்கிறது. "மேற்கு நாடுகள் ரஷ்யாவை யுத்தத்துக்கு அழைத்தால் ஆக்கிரமிப்புக்கு ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைப்போம். மேற்கு நாடுகள் பகுத்தறிவுடன் நடந்து கொள்ளும் என ரஷ்யா நம்புகிறது. ரஷ்யா சமாதானத்தையே விரும்புகிறது. அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு மக்களுக்கு அது தன் நட்புக் கரத்தை நீட்டுகிறது" என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்தது.

பெர்லின் பற்றி ஜனாதிபதி கென்னடி தனது வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்குடன் இன்று 90 நிமிடம் சம்பாஷித்தார்.

## நாடற்ற பிரஜைகள்

### இலங்கை வாக்களிக்கவில்லை

ஐ. நாடுகள், ஆக. 30

நாடற்ற பிரஜைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு கைபெழுத்துக்களைப் பெறுமுகமாக இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் 30 நாடுகள் பங்கு பற்றின. இது சம்பந்தமாக நேற்று நடைபெற்ற ஒரு மகாநாட்டில் உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் இலங்கை உட்பட 7 நாடுகள் இதற்கு வாக்களிக்கவில்லை;




### தேவை

தினசரிப் பத்திரிகையில் அனுபவமுள்ள தமிழ் அச்சுக் கோர்ப்பவர்கள் (கம்போஸிட்டர்கள்) தேவை. சிலிண்டர் மெஷினில் வேலை செய்து அனுபவம் வாய்ந்த மெஷின் மயின்டர் உடனே தேவை விண்ணப்பிக்கவும். த.பெ.எண் 49, யாழ்ப்பாணம்.

### Jaffna College

Jaffna College will re-open for the Third Term on Monday the 4th of Sept. 1961.

K. A. Selliah
Vaddukkoddai Principal

### நந்திகேஸ்வர நாட்டியாலயம்

நல்லூர் - யாழ்ப்பாணம்
அளிக்கும்

**"பரதாஞ்சலி"**

பரதநாட்டியமும் மற்றும் நடனங்களும். தொடர்ந்து

**"ஈழத்தாய்"**

"நாவலர்தாசன்"
அவர்கள் எழுதிய
நவீன நாட்டிய நாடகம்.

தயாரிப்பாளரும் பொறுப்பாளரும்:
**ஸ்ரீமதி நீலா சத்தியலிங்கம்**

நாட்கள்: சனிக்கிழமை
திங்கட்கிழமை
திகதிகள்: 2-9-61; 4-9-61
நேரம்: பி. ப. 6-30 மணிக்கு
இடம்: யாழ். நகரமண்டபம்
பிரவேசக்கட்டணம்:
ரூ. 10/-, ரூ. 5/-, ரூ. 3/-

### நாடகம்

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றம் 2-9-61 மகாஜனக் கல்லூரியில் கட்டட நிதிக்காக நடாத்தும் நாடகம் **"வீரபாண்டிய கட்டப்பொம்மன்"** இதுவரை காலமும் யாழ்ப்பாண நாடக மேடையில் நடைபெற்றிராத பல புதிய அற்புத சிருஷ்டிகள். கடிப்போ மிக உன்னதம். பின்னணி இசையில் ஓர் புதுமை. பொறிபறக்கும் சண்டை. தருணத்தைத் தவறவிடாதீர்கள்! டிக்கட் விற்பனையாகின்றன.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### தேவை

ஆங்கில சிரேஷ்ட தராதரமும் சிங்கள அறிவு, புத்தக வியாபார அனுபவம் உடையவருக்கு புத்தகக் கடையிலோ அல்லது பத்திரிகைக் காரியாலயத்திலோ வேலை தேவை. விபரங்கட்கு: பெட்டி எண் ×13, C/o ஈழநாடு, த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 26559

வேலுப்பிள்ளை சண்முகம் அனலதீவு வழக்காளி எதிராக அம்பலவாணர்கணபதிப்பிள்ளை அனலதீவு எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்றிக்கோட்டின் M. B. 2659-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணி 1961-ம் ஆண்டு புரட்டாதி மீ 30-ந் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:-** முதல் வட்டி ரூபாய் 784-ம் 23-3-59 தொடக்கம் 23-9-59 வரைக்கும் ரூபாய் 400க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 107-19.

**ஆதன விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி அனலதீவு வைரப்பணன் தோட்டம் நிலப்பரப்பு (4) குளி 15½ முது பனைகளும், இளம்பனைகளும். எல்லை கிழக்கு - ஐயம்பிள்ளை பெண் நாகம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு-முருகேசு வைத்திலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு - அரியப்பாசாரியார் வேலுப்பிள்ளை பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு-ஆறுமுகம் பெண் மாரிமுத்துவுக்குரிய ஆதனம் இதன் அடங்கலும் பதிவு $C^{266}_{132}$.

2. ஷெ இறை வைரப்பனந் தோட்டம் நிலப்பரப்பு (1) கு. 9 முது பனைகளும் இளம் பனைகளும். எல்லை கிழக்கு - நாகலிங்கம் கந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு - முருகேசு வைத்திலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு - அருணாசலம் சின்னப்புவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு - முதலாம் ஆதனம் இதடங்கலும் பதிவு $C^{166}_{720}$.

ஆ. ச. இராசேந்திரம்
கொமிஷனர் அன் விலை மதிப்பாளர்

### மனேஜர் பதவிக்கான விளம்பரம்

இரணமடு கிழக்கு ப-நோ-கூ- சங்கத்துக்கு ஓர் மனேஜர் தேவை. 5-9-61 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கிடையில் மேற்படி சங்கத் தலைவருக்கு கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும். பதிவுக் கடிதம்மூலம்.

1. சம்பளம் மாதம் ரூபா 200 (எல்லாம் உட்பட). 2. பிணை ரொக்கம் ரூபா 2000. 3. ஆதனம் ரூபா 3000.

1. தகுதிகள்: S. S. C. தமிழ் அல்லது ஆங்கிலம் சித்திபெற்றவர், 2. வயது: 40 க்குள். 3. கூட்டுறவுச் சங்க அனுபவம் இருக்கவேண்டும். 4. 3, நற்சாட்சிப் பத்திரங்கள்.

கூட்டுறவுச்சங்க பயிற்சி பெற்றிருப்பது விரும்பத்தக்கது. வி. சபாரத்தினம், சங்கத் தலைவர்.

**வியாபாரம்பெருக விளம்பரம்செய்க**

# சீனியில் நடைபெற்ற பெரும் மோசடி!

## உணவு இலாகா அதிகாரிகள் பலர் தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, புதன்

**அரசாங்கத்துக்கு அனுப்பப்படவேண்டிய சீனி தனிப்பட்ட ஒரு வர்த்தகருக்கு பல மாதங்களாக அனுப்பப்பட்டு வந்திருக்கும் மோசடி பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.**

துறைமுகத்திலிருந்து சீனியை ஏற்றிக்கொண்டு சென்ற உணவுக் கமிஷனர் இலாகாவைச் சேர்ந்த ஒரு லொறியை பொலிசார் பின் தொடர்ந்து சென்றனர். அரசாங்க குதத்தில் இறக்குவதற்குப்பதிலாக, இந்த லொறி முகத்துவாரத்தில் சீனியை இறக்கியதைத் தொடர்ந்து பொலிசார் அதைப் பிடித்துக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து, உணவு இலாகாவைச் சேர்ந்த ஒரு தொகையான அதிகாரிகள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சில காலமாகவே இவ்வித மோசடிகள் நடைபெற்று வந்ததாயும், உணவுக் கமிஷனர் இலாகாவின் லொறிகளில் வேலைசெய்யும் சாரதிகள் இரவில் வேலைசெய்ய விருப்பம் தெரிவித்திருந்ததாயும், அதிகாரமளிக்கப்பட்ட அளவுக்கு மேற்பட்ட சீனியை இந்த லொறிகள் ஏற்றி வந்திருக்கின்றன என்றும், இந்த அதிகப்படியான சீனி மூட்டைகள் வழியில் தனிப்பட்ட வர்த்தகருக்குச் சொந்தமான இடத்தில் இறக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

இந்த மோசடிக்கு அரசாங்க அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு உடந்தையாய் இருந்ததாயும், இது பற்றி பூரண விசாரணை நடத்தப்படவிருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

### கிராமச்சபை கூட்டம்

உடுப்பிட்டி, புதன்

கட்டைவேலிக் கிராமச்சபை மாதாந்தப் பொதுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றபோது தலைவர் இ. சச்சிதானந்தம், கிராமச்சபை உறுப்பினருக்குப் போக்குவரத்துச் செலவு கொடுக்க ஸ்தல ஸ்தாபன கமிஷனர் அனுமதி அளிப்பதாயும், அதுபற்றிச் சபையின் விருப்பத்தையும் வினவினர்.

ஆசிரியர் திரு. சி. செல்லப்பா கொண்டுவந்த பிரேரணையின் மேல், சபை கமிஷனரின் அறிவித்தலை கொள்கையளவில் ஏற்பதாக முடிவுசெய்தது.

அத்துளுகுளச் சீர்திருத்தத்திற்கு ரூபா 1900 ஒதுக்கியிருப்பதுடன், பத்துக் குளங்களுக்கும் சிறு தொகைகள் ஒதுக்கப்பட்டன.

### ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு **'யோகீஸ்வர ரசம்'** தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து **பெரும்பாடு நிவாரணி."** தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாணத்தில் இந்திய ஹைகமிஷனர்

யாழ்ப்பாணம், புதன்

இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் இன்று விமான மூலம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். மூன்று தினங்கள் அவர் இங்கு சுற்றுப் பிரயாணம் செய்யவிருக்கிறார்.

### ஆலமரங்களில் பிசாசின் தொல்லை

மன்னார், புதன்

கள்ளிகட்டைக்காட்டுக் கிராம மக்களுக்கு, பிரதான தெருவில் நிற்கும் 3 ஆலமரங்கள் பெரிய தொல்லையைக் கொடுத்துக்கொண்டிருப்பதாயும் இரவில் பிசாசுகளின் கூக்குரல்களும் விஷப்பாம்புகளின் மரண ஓலமும் மாறிமாறி மக்களைப் பயப்படுத்துகின்றன என்றும், எனவே, இவற்றை அழித்துவிடக் கோரி கிராமச்சங்கத் தலைவருக்கு அவ்வூர் மக்கள் அறிவித்திருப்பதாயும் அறியப்படுகிறது.

### சிறு கைத்தொழில் அபிவிருத்தி

கொழும்பு, புதன்

கிராமாபிவிருத்திக் குடிசைத் தொழிற்பகுதி சிறு கைத்தொழில்பற்றி ஆராய்ந்து அதன் அபிவிருத்திக்கு வழி செய்ய முயற்சிக்கும். ரூ. 2 லட்சத்துக்கு மேற்படாத தொழில்கள் பற்றி மட்டுமே அது ஆராயும்.

# பால் சபையில் ரூ.10,000 கையாடல்!

## முன்னாள் காஷியர் கைது

கொழும்பு, புதன்

ரூ. 10,000 மோசடி சம்பந்தமாக பால் சபைத் தலைவர் இரகசியப் பொலிசாருக்கு அறிவித்துள்ளனர்.

பல விடங்களிலிருந்து வசூலான சபைக்குச் சேரவேண்டிய பணம், கணக்குப புத்தகத்தில் செலவு வைக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக சபையின் முன்னாள் காஷியர் ஒருவரை இரகசியப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் சில மாதங்களுக்கு முன் திடீரென வேலையைவிட்டு விலகினர் எனக் கூறப்படுகிறது.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
DOLLAR BRAND

பவுன் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கணகவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J. D. 3

# 'பொலிசாரிடம் ரூபாய் 5 கொடுத்தேன்'

## இலட்சுமித்தோட்ட விசாரணையில் வாக்குமூலம்

கொழும்பு, செவ்வாய் இலட்சுமித் தோட்டக் கமிஷன் இன்று விசாரணையை ஆரம்பித்ததும், முதலாவதாக எஸ். ஆர். சின்னப்பன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் சாட்சியமளித்தார். காங்கிரஸுக்காக ஆஜரான வழக்கறிஞர் திரு. பார் குமாரகுலசிங்கம் சாட்சியை விசாரித்தார்.

சாட்சியமளிக்கையில், எஸ். ஆர் சின்னப்பன் கூறியதாவது:-

"இலட்சுமித் தோட்டத்துக்கு வருவதற்கு முன்னுல், நான் பல தோட்டங்களில் வேலை செய்திருக்கிறேன. இலட்சுமித் தோட்டக் கங்காணியின் மகளை நான் விவாகம் செய்தேன். அதனுல் இந்தத் தோட்டத்துக்கு வர நேரிட்டது. 'காங்கிரஸில் சேரக்கூடாது; காங்கிரஸ் வேலைகளில் ஈடுபடக்கூடாது' என்ற விதிகளுக்கிணங்க நான் வேலையை மேற்கொண்டேன். காலப்போக்கில் என்னுடைய மனைவி என்னுடன் சண்டை போட்டுக்கொண்டு தகப்பனுடன் போய்விட்டார். மனைவி, என்னைத் தேடிவருவதற்கு, அவளுடைய தகப்னர் விடவில்லை. இது சம்பந்தமாக நான் கொழும்பு அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதினேன். இது சம்பந்தமான சகல தொடர்புகளையும் கண்டி அரசாங்க அதிபருடன் வைத்துக்கொள்ளும்படி கொழும்பிலிருந்து எனக்கு பதில் வந்தது. 'அப்படி ஒரு பெட்டிஷனை எதற்காக நீ எழுத வேண்டும்' என்று தோட்டத்துரை ஹார்வி என்னிடம் கேட்டார். தொழிலாளருக்கு வரும் கடிதமெல்லாம் இலட்சுமித்தோட்ட ஆபிஸ் ஊடாக வருவதால், நான் கொழும்புக்கு பெட்டிஷன் எழுதியது தோட்டத்துரைக்கு தெரிந்தது. இப்படியான பெட்டிஷன்கள் இனிமேல் எழுதக்கூடாது என்று திரு. ஹார்வி என்னிடம் எச்சரிக்கை செய்தார். தொடர்ந்து நான் பெட்டிஷன் எழுதும் பட்சத்தில் எனக்கு நல்ல பாடம் படிப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார். தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடக்கூடாது என்று எனக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதோடு 'பெட்டிஷன் அனுப்பியவர் நீ தானு' என்று கேட்டு மூன்று நாலு பேர் அடிக்கவும் செய்தார்கள். நான் பொலிஸுக்குப் புகார் செய்ததின் பேரில் பொலிஸார் வந்தார்கள். எனது வாக்கு மூலத்தை உறுதிப்படுத்த ஒரு வரும் முன்வராத காரணத்தால், பொலிசார் என்னைப் பேசினர். அவர்களுக்கு நான் ரூ. 5 கொடுத்தேன். எனக்காகச்சாட்சியமளித்து, எனது வாக்கு மூலத்தை உறுதிப்படுத்தினுல், இலட்சுமித் தோட்டத்தில் வேலைக்கும் போக முடியாது என்று தொழிலாளர் கூறினர். இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் எனது தகப்பனுரும் வருத்தமாக இருந்தார். அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்லும்படி தோட்டத்துரை என்னிடம் சொன்னுர். ஆனுல் நான் அப்படிச் செய்யவில்லை. எனது தகப்பனுரை நான் விஷம் கொடுத்துக் கொன்றிருக்க வேண்டும் அல்லது அடித்துக் கொன்றிருக்கலாம் என்று சொல்லி தகப்பனுரின் சடலத்தைப் புதைப்பதற்கு அனுமதி பெறுவதற்கு உதவி செய்யத் தோட்டத்துரை மறுத்து விட்டார். பொலிஸுக்குத் தகவல் கொடுக்கப் போவதாகவும் தோட்டத்துரை கூறினுர். வயது வந்த எனது தகப்பனுர் வாதத்தால் பீடிக்கப்பட்டிருந்தார் என்று சொன்ன பிறகு தோட்டத்துரை டாக்டரிடம் கலந்து ஆலோசித்து விட்டு சடலத்தைப் புதைக்கலாம் என்று சொன்னுர். இதன் பிறகு தோட்டத்தை விட்டு வெளியேறும்படி தோட்டத்துரை உத்தரவிட்டார். நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதற்காக 3 மாதம் தொடர்ந்து வேலை செய்யலாம் என்று தோட்டத்துரை சொன்னுர். கிளியறிங் டிவிஷனில் தொடர்ந்து 1959-ம் ஆண்டுவரை வேலை செய்தேன். தோட்டத்தில் வேலை மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆனுல் சம்பளம்தான் மிகக் குறைவு. தோட்டத் தொழிலாளர் பக்கத்துக் கிராமங்களிலுள்ள சிங்களவருடன் சகோதரர் போல் பழகினுர்கள். தொழிலாளர்லயன்கள் சூறையாடப்பட்ட போதும், பக்கத்துக் கிராமங்களிலுள்ள சிங்களவர்தான் எங்களுக்குப் பாதுகாப்புத் தந்தார்கள்."

பார்: சிங்களவர் - தமிழரிடையில் தோட்டத்தில் மனக்கசப்பு இருந்தது என்று சொல்வது சுத்தப் பொய்?

சாட்சி: ஆம்.

தோட்ட நிர்வாகத்துக்காக ஆஜரான வழக்கறிஞர் திரு. ஜெயவிக்கிரமாவினுல் குறுக்கு விசாரணை செய்யப் பட்டபோது, சின்னப்பன் தெரிவித்ததாவது:-

தோட்டத்துரை ஹார்வியும் நிர்வாகமும் தொழிலாளர் சம்பந்தமாக நடந்து கொண்ட விதம் பற்றி தொழிலாளர் அதிருப்தியும், ஆத்திரமும் அடைந்திருந்தனர். பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பிறகுதான் நான் காங்கிரஸில் சேர்ந்து கொண்டேன். தோட்டத் தொழிலாளர் ஓய்வு நேரங்களில், பக்கத்துக் கிராமங்களிலுள்ள சிங்களவரின் வயல்களுக்கு உதவி செய்யப் போவதுண்டு.

தொடர்ந்து காங்கிரஸ் சார்பில் சாட்சியமளித்த சின்னப்பன் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. சாம் விஜயசிங்காவால் விசாரணை செய்யப்பட்ட போது கூறியதாவது:.

"தண்ணீர் விநியோகம் இலட்சமித் தோட்டத்தில் சரியாக இருந்தது. ஆனுல் குடியிருப்பு வசதி மோசமாக இருந்தது. 400 அடி நீளமுள்ள சாக்கடையைச் சுத்தம் செய்யும்படிகூட ஒரு முறை என்னிடம் சொல்லப்பட்டது. இலட்சுமித் தோட்டத்தில் தொழிலாளர் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுகிறுர்கள். மற்றத் தோட்டங்களில் 1 ஏக்கர் செடிகளைக் கத்தரிப்பதற்கு 10 அல்லது 15 பேரை விடுகிறுர்கள், ஆனுல் இலட்சுமித் தோட்டத்தில் 7 அல்லது 8 தொழிலாளர் இதே வேலையைச் செய்ய வேண்டும். சிங்களத் தொளிலாளர் தமிழ்த் தொழிலாளருடன் தமிழில் தான் பேசுகிறுர்கள். கிராமங்களிலிருந்து வரும் தொழிலாளர் மேல் லயன்களில் இருப்பவர்கள் கல்லால் அடித்தார்கள் என்பதை நான் கேள்விப்படவில்லை. மற்றத் தோட்டங்களில் ஒரு ருத்தல் கொழுந்து பறித்தால் 8 சதம் கொடுக்கிறுர்கள். ஆனுல் இலட்சுமித் தோட்டத்தில் 6 சதம் தான் கொடுக்கப்படுகிறது. இப்படி சம்பளத்தில் இருந்து துண்டாடி, பிறகு போனஸ் ஆகத் தொழிலாளருக்குக் கொடுக்கப்படுகிறது.

கமிஷனர்: தோட்டத்துரை திரு. ஹார்வி துப்பாக்கி சகிதமாக தோட்டத்துக்கு வருவதை நீர் பார்த்திருக்கிறீரா?

சாட்சி: ஆம்; பார்த்திருக்கிறேன்.

தொடர்ந்து மிஸ்ஸி நோனு என்பவர் சாட்சியமளித்தார். திரு. பார் குமாரகுலசிங்கம் விசாரணை நடத்தினர். சாட்சியமளிக்கையில் மிஸ்ஸி நோனு தெரிவித்ததாவது:-

என்னுடைய தகப்பனுர் தமிழன். தாய் சிங்களக் குடும்பத்தைச் சேர்ந்தவர். நான் 8ம் வகுப்பு வரையில் படித்திருக்கிறேன். தமிழிலும், சிங்களத்திலும் எனக்கு நன்ருகப் பேச முடியும். இலட்சுமித் தோட்ட மாதர் சங்கத்தில் நான் உப-காரியதரிசியாகவும் இருந்திருக்கிறேன். 1959-ம் ஆண்டு செப்டம்பர் 22ந் திகதி செல்லையா சுடப்பட்ட தினத்தன்று, "காங்கிரஸில் சேர்ந்து நரகத்துக்குப் போக வேண்டாம்" என்று தொழிலாளர் கூட்டத்தைப் பார்த்து திரு. ஹார்வி கூறினுர். தோட்டத்தில் செல்லையா புதைக்கப்பட்ட இடத்தில் தொழிலாளர் ஒரு ஞாபக சின்னத்தையும் கட்டினர். அது இப்போது உடைந்திருக்கிறதா இல்லையா என்று என்னுல் சொல்ல முடியயாது.

திரு. பார் குமாரகுலசிங்கத்தினுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது மிஸ்ஸி நோனு தொடர்ந்து கூறியதாவது:-

நான் கொழுந்து பறித்து வந்தேன். நாள் ஒன்றுக்கு ரூ. 1-90 சதம் எனக்கு சம்பளம் தந்தார்கள். சம்பளமாகத் தரப்பட்ட பணம், பறித்த கொழுந்துக்கு சமமாக இல்லை. மாதர் சங்கத் தலைவி வள்ளியம்மைக்கும், காரியதரிசி கமலாதேவிக்கும், எனக்கும் தோட்டத்தில் வேலை தர திரு. ஹார்வி மறுத்து விட்டார். அவருடைய இந்த நடவடிக்கைக்கு எந்த விதக் காரணமும் இருந்ததாகத் தெரியவில்லை.

அடுத்து, திரு. பார் குமாரகுலசிங்கத்தினுல் விசாரணை செய்யப்பட்ட கே. செபம் சாட்சியமளிக்கையில், பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப்பிறகு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் தான் சேர்ந்ததாகவும், துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு தோட்டத்தில் நடந்த வேலை நிறுத்தத்தின் போது காவற்காரர் துப்பாக்கி சகிதம் ரோந்து சுற்றியதாகவும் தெரிவித்தார்.

விசாரணை தொடர்ந்து நாளைய தினமும் நடைபெறும். திரு.ஜெயவிக்கிரமா, சாட்சியமளித்த கே.செபத்தைக் குறுக்கு விசாரணை செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# அடுத்த ஐ. நா. பொது சபைக் கூட்டம்

## இலங்கைத் தூதுகோஷ்டிக்கு நிதிமந்திரி தலைமை தாங்குவார்

**கொழும்பு, புதன்**

**செப்டம்பர் மத்தியில் ஆரம்பமாகவிருக்கும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்திற்குச் செல்லும் இலங்கைத் தூதுகோஷ்டிக்கு நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார்.**

அங்கத்தினாகளும் ஆலோசகர்களுமாக 12 பேர் இலங்கைத் தூதுகோஷ்டியிலிருப்பார்கள். ஐ. நா. வுக்கு இதுவரை அனுப்பப்பட்ட இலங்கைத் தூதுகோஷ்டியிலேயே ஆகப் பெரிய தூதுகோஷ்டி இதுதான். இலங்கைத் தூதுகோஷ்டியில் 4 ராஜதந்திர தூதர்களும் இருப்பார்கள்.

நிதி மந்திரியைத்தவிர ஐ.நா. விலுள்ள நிரந்தரப் பிரதிநிதி திரு. ஜி. பி. மலலசேகரா, மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதர் திரு. டி. பி. சுபசிங்க, கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதர் திரு. எம் எம். மஹ்ரூப், ரங்கூனிலுள்ள இலங்கைத் தூதர் திரு. ஜி. எப். பீரிஸ் ஆகியோர் இருப்பார்கள்.

திரு. அல்பிரட் எட்வர்ட் திரு. ஸி. குணசிங்கம், திரு. எச். ஓ. விஜயகுணவர்த்தனு, திரு. ஸி. மகேந்திரன், திரு. ஸ்டான்லி ஜயவீரா ஆகியோருடன் மற்றும் ஒருவரும் தூதுகோஷ்டியின் ஆலோசகர்களாய் இருப்பார்கள்.

---

### பிரதமர் சிங்களத்தில் பேசுவார்

கொழும்பு, புதன்

பிரதமமந்திரி ஸ்ரீமதிபண்டார நாயக்காபெல்கிரேட்டில் நடைபெறவிருக்கும் நடு நிலைமை அதிபர்கள் மகாநாட்டில், சிங்களத்தில் உரைநிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### புதிய பட்டினசங்கங்கள்?

உடுப்பிட்டி, புதன்

நல்லூர், உடுவில், அச்சுவேலி, நெல்லியடி ஆகிய கிராமச்சங்கப் பகுதிகளைப் பட்டின சங்க அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் மேற்படி சபைகளின் விருப்பத்தைக் கேட்டுள்ளார்.

பட்டினசபையாக மாறினுல் பொதுமக்கள் அதிக வரிகளைச் செலுத்த நேரிடும் என்ற காரணத்தால் நெல்லியடிப் பகுதி தொடர்ந்து கட்டைவேலிக் கிராமச்சபையின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமெனக் கட்டைவேலிக் கிராமச்சபை தீர்மானித்துள்ளது.

---

### கானு பிரயாணமானுர்

கொழும்பு, புதன்

பொது மராமத்து இலாகாவின் உதவிக் கட்டட அமைப்பு நிபுணர் திரு. கே. ஹென்ஸ்மன் தமது மனைவியுடனும் மூன்று குழந்தைகளுடனும் கானு சென்றுள்ளார்.

இவர், பெல்கிரேட்டில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் இலங்கைப் பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரயாணம் செய்த விமானத்தில் சென்றுள்ளார்.

---

# உள்நாட்டு வருமான இலாகா

## ஊழல்களுக்கு விசாரணைக்கமிட்டி

### திரு. பிலிப்பின் புகாரைத் தொடர்ந்து நிதி மந்திரி நடவடிக்கை

**கொழும்பு, புதன்**

**உள் நாட்டு வருமான இலாகாவில் ஊழல்கள், நிர்வாக ஊழல்கள் ஆகியன நிலவிவருவதாய் ஜனப்பிரதிநிதிகள் சபையில் திரு. பிலிப் குணவர்த்தனு குற்றஞ் சாட்டியதைத் தொடர்ந்து நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறுர்.**

இது சம்பந்தமாக ஒரு விசாரணைக் கமிட்டியை நிறுவி, நான்கு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தனது பாராளுமன்றக் காரியதரிசி திரு. ஜார்ஜ் ராஜபக்ஸாவுக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறுர்.

தாங்கள் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்துக்கு இடமில்லாமல் இந்த இலாகா ஊழியர்கள் இக்கமிட்டிமுன் சாட்சியமளிக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பிலிப்குணவர்த்தனுவும் இக்கமிட்டிமுன் ஆஜராகி தம்மிடமிருக்கும் விஷயங்களைத் தெரிவிக்குமாறு ஏற்பாடு செய்யும்படியும் மந்திரி உத்தரவிட்டிருக்கிறுர்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் தற்காலிக நிரந்தரக் காரியதரிசி திரு. எம். டப்ளியூ. எப். அபய்க்கூன் தேசியத் திட்ட டைரக்டர், திரு. பி. என். சிரிவர்த்தகாரி சப்ளை கட்டுப்பாட்டதிகாரி திரு. டேவிட் லூயீஸ் ஆகியோர் இக்கமிட்டியில் இருப்பார்கள்.

நிதிமந்திரி வெளிநாட்டிலிருந்து திரும்பியபின், தனக்குக் கீழுள்ள புகார் கூறப்பட்டிருக்கும் இதர இலாகாக்களின் விஷயத்திலும் இவ்வித கமிட்டிகளை நியமிக்க ஏற்பாடு செய்வார் எனத் தெரிகிறது.

---

### சேர் ஒலிவர் தலைமையில் கூட்டம்

கொழும்பு, புதன்

கொழும்பில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் ரோயல் ஆசிய சங்கத்தின் (இலங்கைக் கிளை) வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலக்கா தலைமை வகிப்பார்.

இக்கூட்டம் கொழும்பு நூதனசாலை விரிவுரையாளர் மண்டபத்தில் செப்டம்பர் மாதம் முதல் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு நடைபெறும்.

ரோயல் ஆசிய சங்கத்தின் தலைவரான சிலாபம் பிஷப் வண. டாக்டர் எட்மண்ட்பீரிஸ் "விவாக முறைகளும் இலங்கையின் விழாக்களும்" என்பதுபற்றி ஒரு விரிவுரை ஆற்றுவார்.

---

### பெல்ஜியம் ஆட்சேபனை

நியூயோர்க், ஆக. 30

கடங்கா படையிலிருந்து பெல்ஜிய அதிகாரிகளை ஐ. நா. அகற்றியதையிட்டு, பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டிடம் பெல்ஜியம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

### மணிவாக்கு

"யாரேனும் குறைகூறினால் அது உண்மையாயின் திருந்திக் கொள். பொய்யானால் நகைத்து விடு"


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆவணி மீ 15௳ (31-8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சம்பள கமிஷன் அறிக்கை

சம்பளக் கமிஷனின் அறிக்கை வெளியானால், அரசாங்க சிப்பந்திகளில் பலரை அது திடுக்கிடச்செய்யுமென்று பார்லிமெண்டில் கூறப்பட்டது சென்ற திங்கட்கிழமை இரவு, அதாவது அறிக்கையெழுத்தாகி பல மாதங்களுக்குப் பிறகு வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில், சிப்பந்திகள் தினசரி அரைமணி நேரம் அதிகம் வேலைசெய்யவேண்டுமென்றும் அரசியல் உரிமைகள் அவர்களுக்கு இப்போது வழங்கப்படுவதற்கில்லையென்றும், அவர்கள் தங்கள் கடமைகளில் அதிக சிரத்தை எடுத்து, பொதுமக்களுக்கு அவதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளனர். இதெல்லாம் அரசாங்கச்சிப்பந்திகளுக்கு சற்றே கசப்பாக இருக்கலாம். ஆனால் கமிஷன் கூறியுள்ள இந்த யோசனைகளைப்பற்றி யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. உரிமைகள் கேட்கும் சிப்பந்திகள் தங்கள் கடமைகளையும் உணர்ந்து, பொதுமக்களுக்கு மனப்பூர்வமாகச் சேவைசெய்ய வேண்டுமென்பதை சிப்பந்திகளும் மறுக்கமாட்டார்கள். இந்த யோசனைகள் யாரையும் திடுக்கிடச் செய்யத்தேவையில்லை.

சம்பள நிர்ணய விஷயமாக கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் ஏற்கெனவே பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. இப்புதிய சம்பள சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவருவதாயின், அதற்கு அதிக செலவாகும். அரசாங்கத்தின் பண நிலைமை நெருக்கடியாக இருப்பதால், இச்சம்பள சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவருவதில் தாமதப்படுத்துவதாயின், அது சிப்பந்திகள் பலருக்கும் ஏமாற்றமும் மனக்கசப்பும் அளிக்கக்கூடும். பல வருடங்களாகக் கிளர்ச்சிசெய்ததன்மீது சம்பளக்கமிஷன் நியமிக்கப்பட்டது. அக்கமிஷன் தீர விசாரணை செய்து, தங்களுக்கு நியாயமெனப்பட்ட சிபார்சுகளைச் செய்துள்ளது. இதன் பிறகு எக்காரணம் பற்றியும் இச்சிபார்சுகளை அமுலுக்குக் கொண்டுவராமலிருப்பின், அது அதிக அதிருப்திக்கு இடமளித்து, நிர்வாகம் மேலும் மோசமாகவும் கூடும். அதற்கு அரசாங்கம் இடமளிக்காதென்றே நம்புகிறோம்.

இதேசமயம் அரசாங்க சிப்பந்திகளின் புதிய சம்பளவிகிதங்கள் மற்ற வர்த்தக ஸ்தாபனங்களும் பின்பற்றவேண்டியிருக்கும். ஏற்கெனவே சில வர்த்தக ஸ்தாபனங்கள், இப்புதிய விகிதங்கள் பத்திரிகையில் பிரசுரமானதுடன் பலமாக ஆட்சேபித்தன. என்றாலும், தாங்கள் நியமித்த கமிஷனின் சிபார்சுகளை அரசாங்கம் அலட்சியம் செய்து ஒதுக்க முடியாது. நாடு முன்னேற வேண்டுமாயின், தொழிலாளர், சிப்பந்திகளிடையே அமைதியும் திருப்தியும் நிலவவேண்டும். ஆகவே அறிக்கையை வெளியிட்டதுடன் நின்றுவிடாமல், அதிலடங்கிய முக்கிய சிபார்சுகளை கூடிய சீக்கிரத்தில் அமுலுக்குக்கொண்டுவர அரசாங்கம் முன்வரவேண்டியது அயசியமாகும்.

# நகரில் குளங்கள் அவசியம்தானா?

—வீ. இராமகிருஷ்ணன் —

**யாழ்ப்பாண நகருக்கு வனப்பும் குளிர்மையும் அளிக்கவேண்டிய குளங்கள் அழுக்கு நிறைந்த குட்டைகளாகக் காட்சியளிப்பதை எவரும் விரும்பமாட்டார்கள். துர்நாற்றம் வீசும் இக் குளங்கள் நகருக்கு வேண்டியதுதானா என்ற கேள்வியைக் கிளப்பி நகர மக்களின் சிந்தனையைத் தூண்டியிருக்கின்றார் கட்டுரையாளர்.**

சில மாதங்களாக யாழ்ப்பாண நகரில் பலத்த மழை பெய்யவேயில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். உலக சீதோஷ்ண நிலையே மாறிக் கொண்டு வருகின்றதோ என்னவோ? அல்லது தெய்வ சாபம்தானோ?

எப்படியிருந்தாலும், நமது நகரிலுள்ள சிறு சிறு குளங்கள் பல உலர்ந்து போய்க் கொண்டிருக்கின்றன. நீர் மிகக் குறைந்ததினால் அக்குளங்களில் உள்ள மீன்களும் மற்றைய சீவராசிகளும் இறந்து, அழுகி துர்நாற்றத்தைஉண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றன. மாநகரசபை அதிகாரிகள் இந்நிலையைச் சீராக்குவதற்குமுயன்றுகொண்டிருக்கின்றார்கள் என்பதும் தெரிந்தவிஷயம். ஆனால் எதிர்காலத்தில் இதே நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு ஆவன செய்யப்படுகின்றதா என்பதுதான் கேள்வி.

பல மாதங்களுக்கு முன்னரே இப்பத்திரிகையில் ஒரு யோசனை கூறப்பட்டது. குளங்களின் அவசியத்தை நன்குணர்ந்தவர்களில் நானும் ஒருவன். குளங்களை ஆழமாக்கி, சுற்றுப்புறங்களை அழகாக்கி, கண்ணுக்கும் நாட்டுக்கும் குளிர்மை தோன்ற ஆகவேண்டியன செய்ய வேண்டுமென்பதில் எனக்கு ஆர்வம் அதிகம். ஆனாலும் சனச் செறிவு கூடிய நகர எல்லைக்குள் உள்ள குளங்கள் மிகமிக அவசியமா என்பதில் எனக்கு எப்பொழுதுமே சந்தேகம்.

இது சம்பந்தமாக விவாதம் பூரணமாக நடக்க வேண்டும் என்பது தான் எனது ஆவல்.

நகரத்திலுள்ள குளங்கள் மிகக் கேவலமான நிலையிலுள்ளன என்பதை யாரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் இவற்றில் ஒன்றை ஒரு நீச்சல் குளமாக மாற்ற பிரயத்தனங்கள் செய்து பணமும் செலவிடப்பட்டது. யோசனை நல்லது தான். ஆனாலும் அது ஆராயாமல் செய்யப்பட்ட காரியம். இத்தகைய காரியங்களுக்கு ஏற்படும் முடிவே அதற்கும் ஏற்பட்டது. பணம் குளத்தில் கொட்டியதுதான் மிச்சம்.

இக்குளங்களால் என்ன பயன்? மழைநீர் வடிவதற்கு அவை உபயோகமாயுள்ளன என்பர் ஒரு சிலர். சரி ஆனால் இலங்கையிலேயே இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்தில் நல்ல வடிகால் வாய் வசதிகளில்லாமல், நீர் வடிவதற்கு இக் குளங்களையே இன்னமும் நம்பி வாழ்வது புத்திசாலித்தனமாகுமா?

அடுத்ததாக நமது சலவைத் தொழிலாளிகள் இக் குளங்களின் நீரையே நம்பி வாழ்கின்றார்கள் என்பது மற்றொரு காரணம். துணிகள் சலவை செய்யப்படும் விதம் எல்லோருக்கும் தெரியும்தானே. நமது அழுக்குத் துணிகள் வெள்ளாவியில் வேகவைக்கப்பட்ட பிறகு இக் குளங்களில் துவைக்கப்பட்டு, உலர்த்தி, மடித்து நமக்கு அனுப்பப்படுகின்றன. கிருமிகளும், அழுக்கும் நிறைந்த இக் குளத்து நீரில் துவைக்கப்பட்டபிறகு அவிக்கப்படுவதில்லை. இதைப் பலர் மறந்து விடுகின்றனர். இதனால் நமது துணிகள் பார்வைக்கு சுத்தமாயிருப்பவை போல் தோன்றலாம். ஆனால் உண்மையில் முன்னர் நமது வீட்டழுக்கு மட்டுமே உள்ள துணிகளில் வெளி அழுக்கும் சேர்ந்துவிட்டதுதான் உண்மை.

மேலும், நமது சலவைத் தொழிலாளரும் மனிதர்கள் தாம். அவர்கள் தங்களது தொழிலைச் செய்வதற்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டாமா? இவ் வழுக்கு நீரில் நின்றுகொண்டு துர்நாற்றத்தைச் சகித்துக் கொண்டு வேலை செய்வது தான் அவர்களின் தலைவிதியா?

நகர எல்லைக்குள் உள்ள இக் குளங்களை எல்லாம் தூர்த்துவிட்டு, சலவைத் தொழிலாளிகளுக்குத் தேவையான நீர் வசதிகளை இக்கால முறைகளில் செய்து கொடுக்க வேண்டியது மக்களினதும் மாநகர சபையினதும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். ஏதோ பெரிய விஷயங்களைச் செய்வதுபோலக் காட்டி இது சிறு விஷயந்தானே என்று தள்ளிவிடும் பெரியோர்களை என்னென்பது? கன்னாதிட்டிக் குளம், ஆரியகுளங்களுக்கருகில் அவர்கள் சிறிது நேரம் உலாவ வேண்டுமென்பது எனது அவா.

குளங்களைபெயரவில் இருக்கவிட்டு, ஒரு பாவமும் செய்யாத சீவராசிகளை அதில் வளரச் செய்து, பராமரிப்பில்லாத படியினால் அந்த அப்பாவிச் சீவராசிகளை பெரும் அளவில் இறக்க விடுவது வெறும்விளையாட்டல்ல. மிகக் கொடூரமான செயல்.

நாங்கள் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்கின்றோம் என்பதை பெரியோர் நினைவுபடுத்திக் கொண்டார்களானால், இக் குளங்கள் அவசியந்தானா என்பது பற்றி விவாதிக்கவாவது சம்மதிப்பார்கள். நல்ல காரியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டாவது இருப்போமே. ஏதோ நமது மக்களாவது செயலில் இறங்க மாட்டார்களா?

## மாபெரும் மரங்களை இடம் பெயர்த்து நடலாம்

மாபெரும் மரங்கள் கிரேன்கள், இயந்திர சாதனங்கள் இவைகள் உதவியுடன் இருக்கும் இடங்களிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்டு வேறு இடங்களில் ஆழமாக வெட்டப்பட்டுள்ள குழிகளில் வைக்கப்பட்டு இடம் மாற்றப்படும் முயற்சி மேற்கு ஜெர்மனியின் துறைமுகநகரமான ஹாம்பர்க்கில் நடைபெறுகிறது. இம்மாதிரி வளர்ந்த மரங்களை இடம் பெயர்த்து நட்டால் அவை மீண்டும் உயிர் பெற்றுத் தழைக்குமா என்பது குறித்து மிக அனுபவம் வாய்ந்த ஜெர்மன் தோட்டக்காரர்களே சந்தேகப்பட்டனர். அவை வேரூன்றி தழைக்கும் என்பது இப்போது நன்கு புலனாகிவிட்டது.

1963-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் சர்வதேசத் தோட்டக் கலைக் கண்காட்சியை அமைக்கவே நூற்றுக் கணக்கான மரங்கள் இடம் பெயர்க்கப்பட்டு அழகான அமைப்பில் இடம் பெறும்படியாக அமைக்கப்பட்டுள்ளன. ஹாம்பர்க் நகர மத்தியில் வனப்புவாய்ந்த செடிகொடி மரங்கள் அழகான முறையில் அமைக்கப்பட்டுவிட்டன.

காட்சிப் பிரதேசமான 7,00,000 சதுர அடிப் பிரதேசத்தில் செயற்கை முறையில் ஒரு நதி பாய்ந்து வரவும் அது நீர்வீழ்ச்சியாகவும், பாயும் புனலாகவும், படகோட்டிச் செல்வதற்கான நீர்த்தேக்கமாகவும் உபயோகமாவதற்கு என்ன ஏற்பாடுகள் உண்டோ அவ்வளவும் செய்யப்படுகின்றன.

நதியின் தண்ணீர் இம்மாதிரி உபயோகிக்கப்படுவதற்கான இயந்திரங்களைக் கொண்டு தண்ணீர் இறைக்கப்படும். அழகிய பாலங்கள், பளிங்கு சிலைகள் உள்ள திட்டுகள், குழந்தைகள் விளையாடுவதற்கான ஏற்பாடுகள் இவைகள் தவிர, நீர்த் தேக்கத்தின் கரையில் நீர்வாழ் ஜந்துக்களின் உயிர்க் காட்சி சாலையொன்றும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

குழந்தைகள் விளையாடுவதற்கான இந்த ஏற்பாடுகள் எல்லாம் கோபன்ஹேகனிலுள்ள ராபின்ஸன் விளையாட்டுமைதானத்திலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றியே செய்யப்படுகின்றன. டேனிஷ் கட்டடக்கலை நிபுணரான திரு. ஸோரென்ஸன் 1931-ல் குழந்தைகள் விளையாட என்ன சாதனங்கள் எல்லாம் அமைக்கலாம் என்பதை ஆராய்ந்து அவைகளை எல்லாம் ஏற்படுத்தினர். அதைப் பின்பற்றியே ஹாம்பர்க் நிபுணர்களும் இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்திருக்கின்றனர்.

சர்வதேசத் தோட்டக் கண்காட்சி நடைபெறுவது காரணமாகத் தோட்டக் கலை, குழந்தைகளுக்கான நந்தவனம் அமைப்பது அழகான முறையில் தோட்டங்களை அமைப்பது முதலிய விஷயங்களில் பெரும் அபிவிருத்தி ஏற்படுவது நிச்சயம். இக்கண்காட்சியிலுள்ள கருத்துக்களைக் கொண்டு இதர நாடுகளின் அரசாங்கங்கள் தங்கள் நாட்டில் நகரமைப்புகளுக்கானவழிகளை அமைக்கவேண்டுமென்று கண்காட்சியை உருவாக்குபவர்கள் விரும்புகின்றனர்.

## புலோப்பளை இடைத் தேர்தல்

யாழப்பாணம், புதன்

புலோப்பளைக் கிராமச் சங்கத்தின் நாலாம் வட்டார இடைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் தேர்தல் அதிகாரி திரு. டி. எஸ். இரத்தினதுரையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இடைத்தேர்தலில் திருவாளர்கள் கே. எஸ். சேதுகாவலர், கே. விஸ்வநாதன் எஸ். ஆறுமுகம் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## தென்னிந்தியா செல்லும் வலைப் பந்தாட்டக்கோஷ்டி

கொழும்பு, புதன்

வருகிற வெள்ளிக்கிழமை 16 பேரடங்கியமத்தியமாகாண வலைப் பந்தாட்டக் கோஷ்டி ஒன்று தென்னிந்தியாசெல்லும். இவர்களில் பெரும்பாலோர் பாடசாலை மாணவிகளாகும். 4 அதிகாரிகளும் இக்கோஷ்டியில் உள்ளனர். மதுரை, திருச்சினாப்பள்ளி, சென்னை, பங்களூர், மைசூர் ஆகிய நகரங்களில் இவர்கள் விளையாடுவார்கள்

## ஐயாறன் எழுதுவது

கடைத் தெருவிலே ஓர் இந்தியர் சந்தித்தார். இந்திய ஹைகமிஷனர் யாழ்ப்பாணம் வருவதைத் தாம் அறிந்ததாயும், அவரை நேரில் சந்தித்துப் பேச முடியுமா? என்றும் ஆவலுடன் கேட்டார்.

இன்று காலை 11 மணிக்கு 'பாம்கோர்ட்' ஹோட்டலில் இங்குள்ள இந்தியர்கள் அவரைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளதாயும் அச்சமயம் அவரைப் பார்க்கலாமென்றும் தெரிவித்து, அவருடைய குறையைப் பற்றிக் கேட்டேன்.

அவர் சொன்னார்: நான் இங்கு வந்து 12 வருடங்களுக்கு மேலாகிறது. சிறிய தொழில் செய்து ஜீவனம் நடத்தி வருகிறோம். என் அண்ணனும், அவர் மனைவியும் இங்குதான் இருக்கின்றனர். எல்லாரும் இந்தியப் பிரஜைகள். ரூ. 400 விஸா வரி கட்டுமாறு நோட்டீஸ் கிடைத்துள்ளது.

இப்படி விஸா வரி கட்டி இங்கு தொழில் நடத்த எங்களுக்குக் கட்டுபடியாகாது. ஆகையால் சீக்கிரத்தில் தொழிலை முடிவிட்டு, இந்தியா திரும்பத் தீர்மானித்துவிட்டோம். அப்படித் திரும்புவதாயினும் நாங்கள் மூவரும் ரூ. 1200 வரி கட்ட வேணுமாம். அப்போதுதான் இங்கிருந்து எங்கள் சாமான்களையும் எடுத்துச் செல்ல அனுமதிப்பார்களாம். இல்லாவிட்டால் வெறும் கையுடன்தான் செல்ல வேண்டுமாம். சம்பாதிக்கும் நாங்களாவது எப்படியாவது வரி செலுத்திவிடுகிறோம். எங்கள் அண்ணிக்கும் வரி கட்ட வேண்டுமென்று கேட்பது முறையா? இதையெல்லாம் ஹைகமிஷனரிடம் தெரிவித்து முறையிட்டுக் கொள்ளவே விரும்புகிறேன்.

'அதுவுமன்றி, இங்கு தெருவில் இந்தியரைத் திடீர் திடீரெனப் பொலிசார் பிடித்துக் கள்ளத்தோணி என்று கூறி அடித்து, பொலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்கிறார்கள். சிலர் பணம் செலுத்தி விடுதலை பெற்றுள்ளதாகவும் கேள்விப்பட்டேன். இதைப் பற்றியும் ஹைகமிஷனரிடம் தெரிவிக்க வேண்டும் என்றார்.

* * *

நேற்றுக் காலை பலாலியிலே ஹைகமிஷனரைச் சந்தித்த போது, அந்த நண்பரின் இக் கஷ்டங்களைப் பற்றி நேரில் தெரிவித்தேன்.

ஹைகமிஷனர் இதுபற்றித் தாம் இலங்கை அரசாங்கத்திடம் வற்புறுத்தியதாயும், தொழில் செய்யாத மனைவி முதலியவர்களிடமிருந்து விஸா வரி அறவிடக் கூடாதென்று கேட்டதாயும், ஆனால் இலங்கை அரசாங்கம் வருமானத்துக்காகவே இவ்வரியை விதிப்பதால், இவ்வித சலுகைகளைக் காட்டுவதற்கில்லை என்று தெரிவித்துவிட்டதாயும், அப்படிச் சலுகை காட்டுவதாயின் வரி விதிப்பதன் நோக்கமே தோல்வியடைந்து விடுமென்று தெரிவித்ததாயும் சொன்னார். இவ்வரி இந்தியர்களுக்கு மட்டுமன்றி, இங்கு விஸாமீது இருப்பவர்கள் அனைவருக்கும் விதித்துள்ளதாலும், இது இலங்கை அரசாங்கத்தின் வசதியைப் பொறுத்ததாலும் இதில் தாம் வற்புறுத்துவதற்கு எதுவுமில்லை என்று கூறியதுடன், தம்மிடம் எந்த இந்தியரும் நேரில் வந்து, எந்தக் குறைகளையும் தெரிவிக்கலாமென்றும், தமிழில் சொன்னாலும் அதை மொழி பெயர்க்க ஆட்களிருப்பதாயும் கூறினார்.

ஹைகமிஷனருடன் வந்துள்ள அந்தரங்கக் காரியதரிசி திரு. ஜயராமன் அசல் தமிழர் தஞ்சாவூர்க்காரர்.

# "தாராசிங்கின் உண்ணுவிரத பயமுறுத்தலுக்கு பணியேன்"

## இந்தியப் பிரதமர் காட்டும் உறுதி

புதுடில்லி, ஆகஸ்ட் 30.

**"பஞ்சாப் சப்பந்தமாக அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கை உறுதியானது. சரியானது. தனது கொள்கையை மாற்றும்படி செய்யஎதுவும் நிகழாது என நம்புகிறேன்" என்று பிரதமர் நேரு லேகசபையில் அறிவித்தார்.**

"தாராசிங்கின் உண்ணுவிரதத்தைக் கைவிடும்படி பல முறை நான் மன்ருடிக் கேட்டுக்கொண்டேன். இனியும் அவ்வாறே கேட்டுக்கொள்வேன். உண்ணுவிரத பயமுறுத்தலுக்குப் பணிந்தால் அது நாட்டுக்கே அபாயமாகும். தாராசிங்கின் உண்ணுவிரதத்திஞல் ஏற்படும் எதிர் விளைவுகளை நன்கு ஆராய்ந்தபின்பே இம் முடிவுக்கு வந்தேன். மிகவும் முக்கியமானது என நான் கருதும் எதையும் விட்டுக் கொடுக்கவே முடியாது. பஞ்சாபைப் பிரித்தால் அதனல் எல்லோருக்கும் தீங்கு விளையும்" என்றும் அவர் கூறினர். தாராசிங் உண்ணுவிரதம்பற்றி ராஜ்யசபை இன்று விவாதிக்கும்.

தாராசிங்கின் எடையில் 20 ராத்தல் குறைந்திருப்பதாயும் நேருஜி அறிவித்தார்.

---

பெர்லின் எதிரொலி

# இவ்வாண்டு ரஷ்ய படையில் ஆள் குறைப்பு இல்லை

## வாஷிங்டனில் 3 வல்லரசுகள் வெளி மந்திரிகள் மகாநாடு

வாஷிங்டன், ஆகஸட் 30

**இவ்வாண்டு ரஷ்யப் படையிலிருந்து விலக்கப்படவிருந்த ராணுவத்தினரை, விலக்குவதில்லை என ரஷ்யா முடிவுசெய்திருப்பதாயும், பெர்லின் நிலைமையே இதற்குக் காரணம் என்றும் மாஸ்கோ வானெலி அறிவித்தது.**

இதற்கிடையில் ரஷ்யா அனுப்பியிருந்த கடைசிக் குறிப்புக்குப் பதில் அனுப்பாமலிருப்பதென மேற்கு நாடுகள் முடிவு செய்திருக்கின்றன.

ரஷ்யாவுடன் பெர்லின் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடக்குமுன், வாஷிங்டனில் 3 வல்லரசுகள் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு நடக்கும் என்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் அறிவித்தார்.

## இந்தியாவில் ஆயுள் இன்சூரன்ஸ் பெருக்கம

புதுடில்லி, ஆக. 30

கடந்த 10 வருடத்தில் இந்தியாவில் ஆயுள் இன்சூரன்ஸ் மும்மடங்காகப் பெருக்கியிருப்பதாய், இந்த ஸ்பானத்தின் தலைவர் திரு. பி. ஏ. கோபாலகிருஷ்ணன் கூறினர்.

---

# பெல்கிரேட்டை நோக்கி தலைவர்கள் செல்கின்றனர்

## நேருஜி நாளை புறப்படுகிருர்

புதுடில்லி, ஆக. 30

பெல்கிரேட் நடுநிலைமை மகாநாட்டுக்கு தலைவர்கள் சென்றுகொண்டிருக்கிருர்கள். இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்னே நேற்று கராச்சி வழியாக பெல்கிரேட் புறப்பட்டார். இலங்கைப் பிரதமர் பெல்கிரேட் சென்றுகொண்டிருக்கிருர். பர்மியப் பிரதமர் ஊநூவும், நேபாள மன்னர் மகேந்திராவும் புதுடில்லி வழியாகச் செல்கின்றனர். இந்தியப் பிரதமர் நேரு நாளை பெல்கிரேட் புறப்படுவார்.

நேபாள மன்னர் மகேந்திரா நேற்று டில்லியில் நிருபர்களிடம் பேசுகையில், எவரெஸ்ட் சிகரத்தை விட்டுக்கொடுக்க முடியாது என்றும், சீனவுக்குத் தாம் விஜயம் செய்யும் போது இந்த நிலையை விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரைப்பற்றியும் அவர் குறிப்பிட்டார். "நேருஜி எப்பேதுமே நேசமாக இருப்பார். இந்தத் தடவை அவர் மிகவும் நேசமாய் இருந்தார்" எனக் குறிப்பிட்டார்.

## மங்களூர் துறைமுகத்துக்கு ரூ. 5 கோடி

புதுடில்லி, ஆக. 30

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மங்களூர் துறைமுக அபிவிருத்திக்கு ரூ 5 கோடிக்கு மேல் செலவாகும் என அறிவிக்கப்பட்டது.

## சுதுமலை வெற்றி

மானிப்பாய், புதன்

சுதுமலை "விவேகானந்தா" தாச்சி விளையாட்டு வீரர்களுக்கும் கள்ளியங்காடு "ஞான பாஸ்கரோதயசங்க" விளையாட்டு வீரர்களுக்கும் சுதுமலை அம்மன் கோவில் வீதியில் நடைபெற்ற தாச்சி விளையட்டுப்போட்டியில் சுதுமலை வீரர் வெற்றியீட்டினர்.

திரு. த. பசுபதிப்பிள்ளை மத்தியட்சராகக் கடமையாற்றினர்.

---

## பட்டாச்சார்யா விசாரணை

புதுடில்லி, ஆக. 30

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானியர்களால் கடத்திச் செல்லப்பட்ட லெப்டினன்ட் கர்னல் பட்டாச்சார்யாவைப் பாரத வழக்கறிஞர் ஒருவர் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பின் போது பாகிஸ்தான் அதிகாரிகளும் உடனிருந்தனர். அவரைத் தனியாகச் சந்தித்துப் பேச அனுமதிக்குமாறும், வழக்கறிஞர் ஒருவர் அமர்த்தப்படும்வரை அவர் மீது நாளை நடைபெறவிருக்கும் விசாரணையை ஒத்தி வைக்குமாறு பாகிஸ்தானைக் கேட்கும்படியும் இந்திய அரசாங்கம் டாக்காவிலுள்ள தனது தூதருக்கு உத்தரவிட்டிருக்கிறது.

# 'பிரதமருக்கு அரசியல் ஞானம் கிடையாது'

## திரு. பிலிப் குணவர்த்தன பேச்சு

கொழும்பு, புதன்

"எமது பிரதமருக்கு அரசியல் ஞானமே இல்லை. அதனலேயே அவரது கணவன் வாழ்ந்த காலத்தில் அவர் பகிரங்க மேடைகளில் ஏறிப் பேசவில்லை. இன்று அவர் பார்லிமெண்டில் பிரவேசிக்கப் பின்வாங்குவதும் அதே காரணத்தினல்தான்.

இவ்வாறு அவிசாவளை எம். பி. திரு. பிலிப் குணவர்த்தன அத்னமாலிப் பூங்காவில் நடைபெற்ற எம். ஈ. பி. கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்."

அவர் மேலும் கூறியதாவது இந்த முக்கிய பதவிக்கு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை நியமனம் செய்தது அரசியல் சட்டத்திற்கு மாருனது என நான் இப்போதும் கருதி வருகிறேன். ஆனல் பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் இந்த உண்மையை எடுத்துக் காட்டி ஆதரிப்பதற்கு எதுவித உபாயமுமில்லை.

டாக்டர் என். எம். பெரேரா போன்ற அரசியல் வாதிகளுக்கு அரசியல் சட்டத்தின் படி இதுபோன்ற நியமனத்திற்கு இடமில்லை என்பது தெரியும். ஆனல் சொந்த நலனுக்காக இவர்கள் இதுபற்றி எதுவும் பேசாது இருக்கிருர்கள்.

புதிய வரிகள் பற்றிப் பேசுகையில் திரு. குணவர்த்தன குறிப்பிட்டதாவது:

புதிய வரிகள் மிகவும் நியாயமற்றவை. அரசியல் நியதிப்படி அவை மூடத்தனமும் கொடூரமும் வாய்ந்தவை. குறிப்பாக அபிவிருத்தி வரி தமது நித்திய ஊதியத்தில் வயிற்றை நிரப்பிவரும் ஒரு வகுப்பு மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள ஒரு பெருஞ் சுமையாகும். புதிய வரிகளுக்கு கடுமையான எதிர்ப்புக் கிடைக்கப் போகிறது என அரசாங்கத்திற்குத் தெரியவந்துள்ளதால் அரசாங்கம் சில மாற்றங்கள் செய்யவிருக்கிறது என நான் அறிகிறேன்.

அர்த்தமற்ற வரிகளைவிதிக்கிருேம் என்பதை அரசாங்கம் ஏன் நேரத்திற்கு உணரவில்லை? இதிலிருந்து அரசாங்கத்தின் முன்யோசனையற்ற தன்மை புலனுகின்றது. இந்த அரசாங்கத்தை எந்த நேரத்திலும் விழுத்திவிடலாம். மாவு, சீனி முதலியவற்றின் விலையை உயர்த்தி மக்களைக் கஷ்டப்படுத்தாது வேறு வகையில் அரசாங்கம் பணம் தேடியிருக்கலாம். வெளிநாடுகளிடமிருந்து உதவி பெறப் பிச்சை கோருவதைவிட்டு இலங்கையில் இருந்து வந்த வெளிநாட்டுக் கம்பெனிகளிடமிருந்து வசூலித்திருக்கலாம். இலங்கை வங்கியைத் தேசியமயமாக்கியது போல மற்றைய பதின்மூன்று வெளிநாட்டு வங்கிகளையும் ஏன் அரசாங்கம் தேசியமயமாக்கியிருக்கக் கூடாது?

---

# கிராம பாடசாலை தீக்கிரையானது

## புத்தூரில் சம்பவம்

நீர்வேலி, புதன்

புத்தூரிலிருந்து 3 மைல்களுக்கப்பாலுள்ளவாதரவத்தை என்னும் கிராமத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையான மெதடிஸ்த மிஷன் பாடசாலை நேற்று நண்பகல் எரிந்து சாம்பரானது. இச்சம்பவம்பற்றிப் பாடசாலை அதிகாரிகளோ அன்றி அங்குள்ள பொதுமக்களோ விபரமெதுவும் தெரியாதவர்களாக இருக்கிருர்களெனத் தெரிகிறது.

பாடசாலைத் தளபாடங்கள் தஸ்தாவேஜுகள் அத்தனையும் எரிந்து சாம்பராகிவிட்டன. அங்கு கல்வி கற்கும் சுமார் 160 மாணவர்களுக்கும் புதன் கிழமை பாடசாலை விடுமுறைக்குப்பின் ஆரம்பமானபோது தொடர்ந்தும் விடுமுறை அவர்களை வலிய வந்தடைந்திருக்கிறது.

ஆசிரியர்களும் மாணவர்களும் தங்குவதற்கேனும் இடமின்றித் தவிக்கும் நிலையிலிருக்கின்றனர்.

இதுசம்பந்தமாக இப்பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வே. சின்னத்தம்பி பொலிசாரிடம் முறைப்பாடு செய்திருப்பதோடு வடபகுதிக் கல்வி அதிகாரிக்கும் அறிவித்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். தேவசகாயம் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

ஆசிரியர்களுக்கிடையிலோ, அன்றி பொதுமக்கள் மத்தியிலோ, அரசியல் சம்பந்தமானதோ, அன்றி தனிப்பட்டதோ வேற்றுமைகள் எதுவும் இருக்கவில்லையெனவும் சகலருக்கிடையேயும் நல்லெண்ணம் இருப்பதாகவும் சந்தேகப்பட இடமில்லையெனவும் தலைமையாசிரியர் தெரிவித்திருக்கிருரெனத் தெரிகிறது.

இத்தீப்பற்றுதல் சம்பந்தமாக எந்தக் காரணத்தையும் அறிய முடியாது பொலிசார் குழப்பமடைந்துள்ளனர். சுமார் 250 குடும்பங்களையுடைய இக்கிராமத்தில் அநேகமாக எல்லோரும் இனபந்துக்கள். பாடசாலையைச் சுற்றி நாலாபுறமும் வேலிகள் நல்ல முறையில் போடப்பட்டுள்ளனவென்றும் உள்ளே செல்லுவதற்கான பாடசாலைப் படலையும் பூட்டப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது.

இவ்விஷயம் பொலிசாருக்கு ஒரு பிரச்சினையாக இருப்பதாக திரு. தேவசகாயம் தெரிவித்தார்.

---

# 'பொது மயானத்தை கிராம சபை எடுக்கக்கூடாது'

## கட்டுநாயகா கூட்டத்தில் தீர்மானம்

கட்டுநாயக்கா, புதன்

கட்டுநாயக்காவில் நடைபெற்ற பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், சிங்களவர், தமிழர், சோனகர் ஆகியோரடங்கிய பிரமாண்டமான ஒரு பொதுக் கூட்டம் குருணை-கட்டுநாயகா பொது மயானத்தைச் சுவீகரித்து அதன் ஒரு பகுதியை வேறு உபயோகத்துக்கு 'ஒதுக்குவதென்ற அண்டியம்பலாம கிராமக் கமிட்டியின் முடிவைப் பலமாகக் கண்டித்தது. "கிராமக் கமிட்டி நிலமற்றவர்களுக்கு உதவும் வழி இதுதான" என்று திரு. டப்ளியூ. எஸ். டி' சில்வா பேசும்போது வினவினர்.

"வளர்ந்துவரும் ஜனத்தொகையைக் கவனிக்கும்போது இந்த மயானம் ஆதற்குப் போதுமானதல்ல" என நீர்கொழும்பு-கட்டுநாயகா இளம் தமிழர் லீக்கின் உதவிக் காரியதரிசி திரு. அழகிரி முனியாண்டி கூறினர். கிராமக் கமிட்டியின் முடிவை ஆட்சேபித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கும், சம்பந்தப்பட்ட இதர அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

## சம்பளக் கமிஷன் அறிக்கை

கொழும்பு, புதன்

சம்பள அறிக்கை, தேசிய சம்பளக் கமிஷன் அறிக்கை ஆகியவற்றை ஜனப்பிரதிநிதிகள் சபை விவாதிக்க அரசாங்கம் சந்தர்ப்பம் அளிக்கும் என நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினர்.

---

# கல்லோயாவில் வீசிய சூருவளி

## 13 கடைகளுக்குசேதம்

அம்பாறை, புதன்

கல்ஓயா சீனித் தொழிற்சாலைக்கருகில் 5நிமிடம் வீசிய சூருவளியின் காரணமாய் 13 கடைகளும், ஒரு குடிசையும் சேதமடைந்தன. 3 கூரைகள் ஆகாயத்தில் பறந்தன.

அலுமினியம், அஸ்பஸ்டாஸ் தகடுகள், கூரைகள், துணிகள் ஆகியன அலங்கோலமாக வீசப்பட்டன.

மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டு பின் சீர்திருத்தப்பட்டது.

## விமான விபத்தில் 9 பேர் பலி

பாரிஸ், ஆக. 30

பிரெஞ்சு ஜெட் விமானம் ஒன்று இங்கு விபத்துக்குள்ளானதால் 9 பேர் மாண்டனர்

# 1962ஜனவரிமுதல்திகதி
## இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் சட்டம் அமுலாகும்

கொழும்பு, புதன்
இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் சட்டத்தை 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதி அமுல் நடத்துவதென வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தீர்மானித்திருக்கிறார்.

இந்தத் தேதிக்குப் பின் ஆயுள் இன்சூரன்ஸில் ஈடுபட்டிருக்கும் இன்சூரன்ஸ் ஸ்தாபனங்கள் இத்தொழிலைத் தொடர்ந்து செய்யமுடியாது. குறித்த திகதியில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்லாபனத்தின் இன்சூரன்ஸ் பகுதி கார்ப்பரேஷனுக்கு மாற்றப்படும்.

## கரும்புத்தோட்டத்தில் தீ!
### 6 பேர் மரணம்

ஸ்ரங்கர் (நேட்டால்) ஆக. 30
நேட்டால் வடகரையோரத்தில் ஏற்பட்ட கரும்புத்தோட்ட தீ விபத்தில் ஆறுபேர் மரணமானர்கள்.

இதுவரை ஏற்படாத இப்பெரும் தீ விபத்தினல் கொல்லப்பட்டவர்களில் 5 பேர் ஆபிரிக்கர் என்றும், ஒருவர் இந்தியர் என்றும் தெரிகிறது.

## இப்போது அவர் எம். பி. அல்ல

கொழும்பு, செவ்வாய்
சென்றவாரம் புதன்கிழமையன்று கே. எம். பி. ராஜரத்ன 18 மாத கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க ஆரம்பித்த போதே அவர் பார்லிமெண்ட் வெளிமடை தொகுதி மெம்பர் பதவியை இழந்துவிட்டார். அவர் இப்போது ஒரு எம். பி. அல்ல.

ஆனல் அவரது தண்டனை 2 மாதங்களுக்குக் குறைக்கப்பட்டு விட்டதால் அவர் இடைத் தேர்தலுக்கு அபேட்சகராக நிற்கலாம். ஆனல் அவர் சிறையிலிருப்பதற்குள் இடைத் தேர்தல் நடைபெறுமலிருக்க வேண்டும்.

இலங்கை அரசியல் சட்டத்தின் 13 வது விதிப்படி 12 மாதங்களுக்கு மேற்பட்ட தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்துக்காக ஒருவர் சிறைவாசம் அனுபவிக்க ஆரம்பித்ததுமே அவர் பார்லிமெண்ட் மெம்பர் பதவியை இழந்து விட்டவராவார்.

## வரிச்சுமை தாங்க முடியாது

கெஸ்பெவ, புதன்
"இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம், நாட்டை அழிவுக்குத்தான் கொண்டு வருகிறது. மக்களால் தாங்க முடியாத வரிச்சுமைகளை அரசாங்கம் விதித்துள்ளது. இதனுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் இருமடங்காகிவிட்டது."

பட்ஜட் வரியை ஆட்சேபித்து பிலியந்தலை நிவான்திடியாவில் நடைபெற்ற கூட்டமொன்றுக்குத் தலைமைவகித்த கொழும்பு தெற்கு முதல் எம். பி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எம். டி. எச். ஜயவர்ட்தன பேசுகையில், இந்த நாடு பெரும் ஆபத்தான நிலையில் இருக்கிறதென்றும் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகத்தான் இருக்குமென்றும் கூறினர்.

பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துடன் செயல்பட்ட அரசாங்கம், ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றுதான் என்று கூறிய அவர், புதிய பட்ஜட் ஏழை மக்களுக்குப் பாதகமாகவும் மந்திரிமாருக்குச் சாதகமாகவும் அமைந்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

# நம்பிக்கையின்மீது
## சிறைக் கைதிகளுக்கு விடுதலை
### ஆலோசனைசபை அமைக்க மந்திரி முடிவு

கொழும்பு, புதன்
நம்பிக்கையின் மீது சிறைக் கைதிகளை விடுதலையாக்குவது பற்றித் தமக்கு ஆலோசனை கூறுவதற்கென, உள் நாட்டு மந்தி திரு. மைத்திரிபால சேனநாயக்கா, ஒரு ஆலோசக சபையை அமைக்கத் தீர்மானித்துள்ளார்.

உள்நாட்டு அமைச்சு நிரந்தரக் காரியதரிசி திரு. ஷெல்டன் சி. பெர்ணண்டோ, இந்த ஆலேகசபைக்குரிய வேலைகள் பற்றிய ஒரு மகஜரை உருவாக்கும் படி சிறைக் கமிஷனர் திரு. வி. என். பிள்ளையைக் கேட்டுள்ளார்.

பிரஸ்தாப சபையில் மூன்று பேர் அங்கப் வகிப்பர் எனவும் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவர் சபைக்குத் தலைமை தாங்குவார் எனவும் தெரிய வருகிறது. மற்றைய இருவரும் சமூகவியல் வல்லுனர்களாக இருப்பர். சிறைக் கமிஷனர் இச் சபைக்கு ஆலோசனை கூறிவருவார். சிறை நிர்வாகங்களைச் சீர்ப்படுத்துவதற்கு நம்பிக்கை சபையொன்றை நிறுவுவதென திரு ஈ. எப். என். கிரேஷியன்கூறியிருந்தார். மரண தண்டனைக் கமிஷனுக்குத் தலைமைதாங்கிய ஆவுஸ்திரேலிய நிபுணர் திரு. என். மொறிஸ் என்பவரும் நன்னம்பிக்கை சபை ஒன்று நிறுவப்பட வேண்டும் என யோசனை கூறினர்.

நன்னம்பிக்கையின் பேரில் சிறைக் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஏற்கெனவே உள்நாட்டு மந்திரி சலுகையுள்ளவராகையால் நன்னம்பிக்கை சபையை நிருவாக அடிப்படையில் நிறுவி அதன் ஆலோசனைக் கேற்ப நிருவாகம் செய்து வரலாம் என்று உத்தியோக பூர்வமான அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

நீதி அமைச்சருடன் கலந்தாலோசனை செய்யபிற்பாடு நன்னம்பிக்கை சபை அமைப்பது பற்றி உள்நாட்டு அமைச்சர் முடிவுசெய்வார் எனத் தெரியவருகிறது.

பல நாடுகளில் சிறைக்கைதிகள், சிலகாலச் சிறைவாசத்திற்குப் பின்னர் நன்னம்பிக்கையின் பேரில் விடுதலையாக்கப்படுகின்றனர். சிறைத் தண்டனைக் காலப்பகுதியில் அரைவாசி அல்லது மூன்றில் இரண்டு பகுதி நன்னம்பிக்கை விடுதலையளிக்கப்படுகிறது. இக்காலப் பகுதியில் இவர்கள் சில நியதிகளை மேற்கொள்ள வேண்டியவராவர். நியதிகளை அநுசரிக்கத் தவறினல் மீண்டும் சிறைவாசம் பெறுவர்.

நன்னம்பிக்கை விடுதலை அளிக்கு முன்னர் சிறைவாசிகள் நன்னம்பிக்கை சபையின் விசாரணையொன்றுக்கு உள்ளாவர். ஐக்கிய அமெரிக்காவில் சபையினர் கைதிகளது ஆதி அந்த உறவுகள் யாவற்றையும் அறிந்த பின்னரே தீர்ப்பளிப்பர்.




# 10லட்சம் ரூபாய்
## கணக்கு தீர்க்கப்படவில்லை
### துறைமுக கமிஷன் அறிக்கையில் விபரம்

கொழும்பு, புதன்
1960-ம் ஆண்டில் துறைமுக சாமான் கார்ப்பரேஷன், துறைமுகக் கமிஷனுக்கு 10 லட்சம் ரூபாய்க்குமேல் கொடுக்கவேண்டியிருக்கிறது. இன்னும் இந்தக் கணக்கு தீர்க்கப்படவில்லை. சில கணக்குகள் கடந்த 28 மாதங்களாகத் தீர்க்கப்படவில்லையென்றும் துறைமுகக் கமிஷனின் நிர்வாக அறிக்கை கூறுகிறது.

## பத்திரிகை ஆசிரியருக்கு சபாநாயகர் எச்சரிக்கை
### டில்லி லோக் சபையை அவமதித்த குற்றம்

புதுடில்லி, ஆக. 29
"பிளிட்ஸ்" பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். கே. கரஞ்சியா சென்ற ஏப்ரல் மாதம் 25-ம் திகதி லோகசபையின் மதிப்புக்குரிய ஒரு உறுப்பினர் பற்றி அவதூருகவும் இகழ்ச்சியாகவும் அவர் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

இது சம்பந்தமாக அவரை இன்று லோகசபையில் ஆஜராகும்படி சபாநாயகர் உத்தர விட்டிருந்த தற்கிணங்க இன்று அவர் ஆஜராகி இருந்தார்.

சபாநாயகர் திரு. அனந்த சயனம்ஐயங்கார் அவரை எச்சரிக்கை செய்து கூறியதாவது:

'மதிப்புக்குரிய சபையின் உறுப்பினர் பற்றி நீர் எல்லை மீறி அவதூறாக எழுதியிருந்து குற்றத்திற்குரிய விஷயமாகும். சபை உறுப்பினர் பற்றி எழுதும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும்'

லோகசபையில் குற்றம் சாட்டப்பட்டு ஒருவர் ஆஜர் செய்யப்பட்டது இதுவே முதல் தடவை.

## வினேபா ஜியின் 66-வது பிறந்த தினம்
### இலங்கையில் கொண்டாட ஏற்பாடு

கொழும்பு, செவ்வாய்
பூதான இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஆச்சார்ய வினேபாபாவேயின் 66-வது பிறந்த தினக்கொண்டாட்டத்தை கொழும்பு ரோயல் கல்லூரியில் கொண்டாட நாலந்த வித்தியாலயத்தின் சர்வோதய சிரமதான இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது.

அடுத்த மாதம் 11 ம் திகதி நடைபெற இருக்கும் பிறந்த் தினக் கொண்டாட்டத்துக்கு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் தலைமை வகிப்பார்.

## பஸ் சேவைகள் அதிகரிக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்
நூற்றுக் கணக்கான பாதைகளில் இ. போ. ச. பஸ் சேவைகளை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே இருந்த பஸ் சேவைகள் பஸ் போக்குவரத்து தேசிய மயமாக்கப்பட்ட பிற்பாடு இ. போ. ச. வினல் அதிகரிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில பஸ் சேவைகளை இ. போ. ச. அடுத்த நிதி வருஷம் முடியுமுன்னர் புதிதாக ஆரம்பிக்கவிருக்கிறது. பெரிய நகரங்களிலும் கிராமங்களிலும் பஸ்கள் அடிக்கடி ஓடக்கூடிய வசதிகள் அடுத்த நிதிவருடத்தில் இ. போ. ச. ஆரம்பிக்கவிருக்கின்றது.

# தோட்டங்களில் குடிசைத் தொழில் ஆரம்பிக்கவேண்டும்

## தொழிலாளர் கூட்டத்தில் இ. தொ. கா. பிரதிநிதி பேச்சு

நாவலப்பிட்டி, புதன்

"தோட்டப்பகுதிகளில் நிலவி வரும் வேலை இல்லாத் திண்டாட்டத்தைச் சமாளிப்பதற்கு தோட்டங்கள் தோறும் குடிசைக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்" என இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் கம்பளை மாவட்டப் பிரதிநிதி திரு. எம். பி. வீரையா கலத்தை வெஸ்பெயர் டிவிஷனில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

"நாட்டின் பொருளாதாரம் மேம்பட ஓய்வு நேரங்களை உணவு உற்பத்தியில் பயன்படுத்தவேண்டும். காய்கறித் தோட்டம், கோழிப்பண்ணை, கால்நடைவளர்ப்பு என்பன வற்றில் பயன்படுத்தவேண்டும். படித்த வாலிபர்கள் கூட்டுறவு முறையில் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் கிராமிய மக்களுடன் கலந்து உறவாடி சௌஜன்யமாக வாழவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

பொதுக் காரியதரிசி திரு. எஸ். தங்கசாமி பேசுகையில் கடந்த ஐந்து வருடமாக குறித்த தோட்டத்தில் தோட்டக் கமிட்டித் தலைவராக கடமையாற்றி வேலைநிறுத்த போராட்டத்தைவெற்றிகரமாக நடத்திய திரு. சைமனுக்கு மாவட்டத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.

### மந்திரிமார் சம்பளத்தில் வெட்டுக!

ஹபறடுவ, புதன்

நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களுக்குப் பணம் தேவைப்பட்டால், மந்திரிகளினதும், பார்லிமெண்ட் அங்கத்தவர்களினதும் சம்பளத்தில்வெட்டும்படி, கதலுவ கிராமச்சபை, அரசாங்கத்தைக்கேட்டுள்ளது.

தலைவர் திரு. எல். எச். அமரியாஸ் டி' சில்வா தலைமையில் நடைபெற்ற கதலுவ கிராமச்சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தான் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானத்துக்கு 6 பேர் சாதகமாகவும் ஒருவர் பாதகமாகவும் வாக்களித்தனர்.

### கசிப்பை ஒழிக்க வழி

வத்தளை, புதன்

மந்திரி மைத்திரிபால சேனநாயக்காவுக்கு, ஒரு கிராமசபை அங்கத்தவரான திரு. ஹென்றி பறனவிதானை அனுப்பிய மகஜரொன்றில் 'கசிப்பை' ஒழிப்பதற்கான பத்துயோசனைகளைத் தெரிவித்துள்ளார்.

அவற்றுள் சில வருமாறு:

சாராயம் போத்தல் ஒன்று 6 ரூபாய்க்கு விற்பனை செய்யவேண்டும். நாடுமுழுவதும் கள்ளு, சாராயத் தவறணைகளைத் திறக்கவேண்டும். தவறணைகள் இரவு 10 மணிவரை திறந்திருக்கவேண்டும். 'கசிப்பு' விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறுவேலை அளிக்கப்படவேண்டும். பாவனையாளர்களுக்கு வசதியான முறையில் கள்ளு, சாராயத்தவறணைகள் இருக்கவேண்டும். 'கசிப்பு' உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், அவருக்கு கசையடி, அபராதம் ஆகியவைகளுடன் கடுழியச் சிறைத்தண்டனையும் விதிக்கவேண்டும்.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றது

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்.

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




இலங்கைத் தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்— இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸ்லிஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.



தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

"மில்க்மெயிட்" பாலை எப்போதும் ஞாபகமிருக்கவும்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்


### வானொலி நிகழ்ச்சிகள்

#### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 31-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 மலாய தேசியதின நிகழ்ச்சி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-45 'உலகம் பலவிதம்' - நாடகம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி. 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

#### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-55 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. லீலா-டி. சரோஜா பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 டி. லீலா-டி. சரோஜா பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-45 ராகம், தானம், பல்லவி - எம். டி. ராமநாதய்யர் - பட்டு, 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 இசைக்கோவை.

### அல்ஜீரிய போராட்டம் தீவிரமடையும்

அல்ஜீரியர்ஸ், ஆக 29

பிரான்சுக்கெதிரான அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும் என புதிய சுதந்திர அல்ஜீரிய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

## தாமோதர விலாஸ்

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்
விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
மகத்தான வெளியீடு!

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு) — கெப்பிட்டல் (ஆமர் வீதி கொழும்பு)
வெலிங்டன் — மனோகரா (யாழ்ப்பாணம்)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) — விஜிதா (மஸ்கேலியா)
மொடர்ன் (பதுளை) — விஜயா (மட்டக்களப்பு)
லக்ஷ்மி (இரத்தினபுரி) — தீவொளி (நுவரேலியா)




சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
எம். ஆர். ராதா,
எஸ். வி. சுப்பையா, சாவித்திரி
நடித்த

## பாவ மன்னிப்பு

எல்லோரும் குடும்பத்துடன் பார்த்து
மகிழவேண்டிய படம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 4 மணிக்கும் சனி, ஞாயிறு
காலை 10-30 மணிக்கும்

## ஏழு திருடர்கள்
SEVEN THIEVES


# மொழிப்பிரச்சினை பாஞ்சாலத்திலும் உள்ளது: சுமுகமாகத் தீருமென்று ஹைகமிஷனர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

'மொழிப் பிரச்சினை இங்குமட்டுமன்றி பஞ்சாப் முதலிய இடங்களிலுமுள்ளது. இப்பிரச்சினை எல்லாம் சீக்கிரத்தில் சுமுகமாகத் தீர்ந்துவிடுமென்றே நம்புவோம்" என்று இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ கபூர், பலாலி விமான நிலையத்தில் இறங்கியதும் 'ஈழநாடு' பிரதிநிதியிடம் கூறினர்.

இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ பி. கே. கபூர் நேற்று காலை விமான மூலம் கொழும்பிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார். பலாலி விமான நிலையத்தில், மேயர் திரு. டி. துரைராஜா, யாழ்ப்பாண நகர மக்கள் சார்பாக அவருக்கு மாலையிட்டு வரவேற்ருர். "ஹாண்ட் லூம்ஸ்" திரு. நடராசாவுள்ளிட்டு வேறு சிலரும் மாலை சூட்டி வரவேற்றனர்.

பலாலி விமான நிலயத்திலிருந்து, காங்கேசன்துறை விருந்தினர் விடுதிக்குச் சென்று, அங்கிருந்து கச்சேரிக்கும், பின்னர் நகர மண்டபத்துக்கும் சென்று மேயரைச் சந்தித்தார். பொதுஜன வாசகசாலை கோப்பாய் நெசவு நிலயம், நீர்வேலி குழந்தை மடுவம், இவற்றுக்குச் சென்று பார்த்தார். மாலை 4 மணிக்கு மேயர் திரு. துரைராஜா, ஹைகமிஷனருக்கு ஒரு சிற்றுண்டி உபசாரமளித்தார். பல கவுன்சிலர்களும் பிரமுகர்களும் அதில் கலந்து கொண்டனர்.

அங்கிருந்து கோட்டையில் பல இடங்களைப் பார்த்துவிட்டு இந்தியன் ஹான்ட் லூம்ஸுக்குச் சென்ருர். ஹான்ட்லூம்ஸ் ஸ்ரீ ராமச்சந்திரன் இரவில் ஹைகமிஷனருக்கு ஒரு விருந்தளித்தார்.

இன்று காலை கீரிமலை கோயிலுக்குச் சென்று தரிசித்துவிட்டு, காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை ராமநாதன் கல்லூரி, மூளாய் ஆஸ்பத்திரி, கொக்குவில் இந்து கல்லூரி, யாழ்ப்பாண இந்துக் கல்லூரி முதலிய இடங்களுக்குச் செல்லுகிருர்.

## மன்னார் பள்ளிவாசலில் திரு நபி அவதார விழா

மன்னார், புதன்

மன்னார் உப்புக்குளம் லேக் வீதி மஸ்ஜிஸதுல் அஸ்கர் பள்ளிவாசலில் அண்ணல் நபியின் அவதாரவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழவுக்கு ஜனப் சி. எஸ். சுலையான் தலைமைதாங்கினர்.

அல்ஹாபீஸ் எம். சதக்கத்துல்லா ஆலிம் மீலாத்தின் சிறுப்புப் பற்றியும் நபிகள் திலகத்தின் வாழ்க்கைத் தத்துவங்கள் பற்றியும் விளக்கினர். அடுத்து ஜனப் எம்.எஸ். எம். புஹாரி நபிகள் நாயகத்தின் போதனைகள் இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்புவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள்,அவர்கள் சமாளிக்கவிருந் இன்னல்கள் ஆகியனபற்றி விரிவாக விளக்கினர்.

ஜனப் எஸ். எம். எம். ஆலம் ஆசிரியரின் நன்றியுரையைத் தொடர்ந்து, மாணவ மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி, குர்ஆன் மனனப்போட்டி ஆகியவைகளுக்குப் பரிசில்களும், ஹிதாயத்துல் இஸ்லாம் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டுக் கூட்டம் முடிவடைந்தது.

## கல்வி முன்னேற்றத்தை பொறுத்தே மாணவர் மாற்றம் செய்யப்படும்

கொழும்பு, புதன்

விவேகப் பரீட்சையின் மூலம் 11 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க முடியாது. மாணவர் கல்வி கற்கும் காலத்தில், செய்கை முறைப் பாடங்களையோ அல்லது வேறு வகையான பாடங்களைப் பயிலவோ செய்வதற்கான வழி வகைகளை கல்வி அமைச்சு மேற்கொள்ள இருக்கிறது. பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வி பயிலும்போது அவர்கள் அடைந்து வரும் முன்னேற்றத்தைக் கவனிக்கும் படியும், அவசரம் ஏற்படும் பட்சத்தில் அவர்களை வேறு பாடங்கள் பயிலக் கூடிய விதத்தில் மாற்றம் செய்யுமாறும் பள்ளிக்கூட அதிபர்கள் கேட்கப்படுவார்கள்.

மாணவர்கள் காட்டும் அபிவிருத்தியில் அடிப்படையில்த் தான் அவர்கள் ஒரு துறையிலிருந்து மற்ஞெரு துறைக்கு மாற்றம் செய்யப்படுவார்கள்.

## ரோம் நகரில் பிரதமர்

கொழும்பு, புதன

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் தூதுகோஷ்டியினரும் பெல்கிரேட் செல்லும் வழியில் இன்று ரோம் நகரில் தங்கினர்கள்.

## மற்றுமொரு பௌத்த பல்கலை கழகம்?

கொழும்பு, புதன்

பலாகலையிலுள்ள சரஸ்வதி பிரிவினைவை, ஒரு பௌத்த கலாச்சார பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கான ஒழுங்குகள் இப்பொழுது நடைபெற்றுவருகிறது.

## ஐ. நா. வில் குடியேற்ற ஆட்சிமுறை

லண்டன், ஆக. 30

குடியேற்ற ஆட்சிமுறையை ஒழிக்கவே[illegible]மென்ற ஐ. நா. வின் தீர்மானம் அமுல்நடத்தப்படவேண்டும் என்ற விஷயத்தை ஐ. நா. நிகழ்ச்சி நிரலில் சேர்க்க வேண்டுமென ரஷ்யா கேட்டிருப்பதாய் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ அறிவித்தார்.

நியூயோர்க், ஆக 30

அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் ஐ. நா.வின் கூட்டத்தில் 92 பிரச்சினைகள் இடம் பெறவிருக்கின்றன.

## சுகர்ணோவுடன் 42 பேர் தூதுகோஷ்டி

பெல்கிரேட், ஆக. 30

மொராக்கோ மன்னர்ஹஸன் பெல்கிரேட் நடு நிலைமை மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டுப் புறப்பட்டார். அவர் வழியில் இத்தாலி, ஐக்கிய அராபியக் குடியரசு, மாலி ஆகிய நாடுகளின் ஜனதிபதிகளைக் கண்டு பேசினர்.

டாக்டர் சுகர்ணோ 42 பேரடங்கிய தூது கோஷ்டியுடன் பெல்கிரேட் சென்ருர். டாக்டர் நிக்மோ, ஆர்ச் பிஷப் மக்காரியோஸ் ஆகியோர் இன்று பெல்கிரேட் அடைவார்கள்.

## இந்திய இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மாணித்துள்ளோம். இதற்கு இந்தியா பிரதிநிதியும் அத்திவாரமிட்டிருக்கிருர். இதன் வளர்ச்சிக்கு இந்தியாவின் உதவியையும் எதிர்பார்க்கிருேம். இந்நூல்நிலயத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும உடனுதவும் பகுதிக்கு இந்தியாவிலிருந்தும் அறிவுச்செல்வங்களாக நல்ல நூல்களை தங்கள்மூலம் பெறுவோமென நம்புகிறேன்.

அடுத்ததாக மாநகரசபை அங்கத்தவரான காதி எம்.எம். சுல்தான் பேசியதாவது:-

தமிழர்களும் முஸ்லிம்களும் எதுவித வேற்றுமையுமின்றி இரண்டறக் கலந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வருகிருேம். இரண்டே முஸ்லிம் அங்கத்தவர்களையுடைய இம்மாநகர சபையில் என்னை முன்புமேயராகத் தெரிவுசெய்து மிகப்பெருந் தன்மை காட்டியிருக்கிருர்கள். இங்கு வாழும் முஸ்லிம்கள் கமத தொழிலிலேயோ அன்றி கைத்தொழிலிலேயோ ஈடுபட்டவர்கள் அல்ல, பெரும்பாலானேர் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள். அரசியல் பொருளாதார விஷயங்களில் நாம் ஐக்கியமாகவே செயல்பட்டு வருகிருேம். நாமும் தமிழர்கள்தாம். இந்திய கலாச்சாரத்தையே நாமும் பின்பற்றுகிருேம்.

திரு. கபூர் தமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசும் போது, தனக்குஅளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்திற்கு இந்தியாவின் சார்பில் நன்றி தெரிவித்ததோடு, இரு நாட்டுக்குமிடையில் இருந்துவரும் நட்புறவு தொடர்ந்தும் வளர்ந்து வருமெனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலயத்தில் இல்லாத நூல்களின் பட்டியல் ஒன்றை தமக்குத் தருமாறும் இந்நூல் நிலயத்திற்கு வேண்டிய இந்திய நூல்களை அன்பளிப்புச் செய்வதாகவும் திரு. கபூர் தெரிவித்தார்.

இந்த விருந்துபசாரத்தில் முன்னுள் மேயரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. துரையப்பாவும், மேயர் திரு. துரைராசாவும் ஒருங்குசேர அமர்ந்திருந்து சாவகாசமாகச் சில வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்தது பலரது கண்களுக்கும் ஒரு முக்கிய விருந்தாக அமைந்திருந்தது.

திரு. கபூர் நேற்று இரவு நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று தரிசித்தார்.

## பொன். கந்தையா ஞாபகார்த்தம்

உடுப்பிட்டி, புதன்

முன்னைநாள் பருத்தித்துறைப் பாரளுமன்ற உறுப்பினரும், இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான பொன்னம்பலம் கந்தையாவின் ஞாபகார்த்த விழா வெள்ளிக்கிழமை பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்திற் கொண்டாடப்படும்.

இக் கூட்டத்தில் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திருவாளர்கள். பீட்டர் கெனமன் ஸ்டான்லி திலகரத்ன, திஸ்ச விஜயரத்ன, ஏ.வைத்திலிங்கம், செனட்டர் எஸ். நடேசன் ஆகியோர் பிரதம பேச்சாளராகப் பங்குபற்றுவர்.

## இந்தியாவுக்கு 10 கோடி டாலர்

புதுடில்லி, ஆக. 30

இந்தியாவில் பெட்ரோலிய தொழில் அமைப்பு சம்பந்தமாக இத்தாலி, 10 கோடி டாலர் கடன் அளிக்கும் என அறிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.